# சிலுவையே, தேவனுடைய சபையில் எல்லாவற்றையும் ஆளுகைசெய்கிறது

Transcribed from a message spoken in December 2016 in Angamaly, Kerala

*By R.S.Milton*

எசேக்கியேல் புத்தகத்திலிருந்து முக்கியமான சில செய்திகளை நாம் பார்க்கலாம். எசேக்கியேல் புத்தகம் முழுவதையும் ஆராய்ச்சிசெய்வது என் நோக்கமல்ல. நம்முடைய நிலைமைக்கு எது அவசியமோ அதை மட்டும் நாம் பார்க்கலாம். சிறைப்பட்டுப்போன இஸ்ரயேல் மக்களுக்கு எசேக்கியேல் தீர்க்கதரிசி தீர்க்கதரிசனம் உரைத்தார். அவர்களுக்கு ஒரு செய்தி இருந்தது. எல்லாக் காலங்களில் வாழ்கின்ற தேவனுடைய மக்களுக்கும் ஒரு செய்தி உண்டு. இந்தக் காலத்தில் வாழ்கிற நமக்கும் ஒரு செய்தி உள்ளது. கவனத்தோடு வாசித்தால் அதைப் பெற்றுக்கொள்ளலாம். தேவனுடைய மக்கள் செய்த சில தவறுகளை நாம் தவிர்க்க வேண்டும். தவறும்போது அதை மீண்டும் கட்டுவதற்கு என்ன வழி என்று நாம் பார்க்கலாம்.

God restores the temple and shows the temple to Ezekiel. This temple was a type of Christ. In what kind of temple does God dwell? This is described in Ezekiel 40 – 48. In the new temple God shows to Ezekiel, there was an altar right at the centre of the temple. This altar governs all things in the house of God. This altar is a type of cross and the temple is a type of church and therefore "the cross" governs everything in the church. சிலுவையே தேவனுடைய சபையில் எல்லாவற்றையும் ஆளுகைசெய்கிறது. எசேக்கியேல் கண்ட ஆலயத்திலே சிலுவை எல்லாவற்றையும் ஆளுகைசெய்கிறது. எசேக்கியேல் கண்ட தேவாலயத்தில் பலிபீடம் நடுமையத்தில் இருந்தது. இந்தத் தேவாலயத்திற்குமுன்பு கூடாரம் இருந்தது. அந்தக் கூடாரத்திலும் ஒரு பலிபீடம் இருந்தது. ஆனால், அந்தக் கூடாரத்திலே பலிபீடம் நுழைந்தவுடனே ஏறக்குறைய வாசலிலே இருந்தது. ஆனால், எசேக்கியேலின் தேவாலயத்திலே பலிபீடம் தேவாலயத்தின் நடுமையத்தில் இருந்தது. தேவாலயம் முழுவதும் ஒரு சதுர வடிவத்தில் இருந்தது. இரண்டு மூலைவிட்டங்களை வரைந்தால் இரண்டு மூலைவிட்டங்களும் வெட்டுகிற இடம்தான் அதின் மையம். அந்த மையத்தில் ஒரு பெரிய பலிபீடம் இருந்தது. எசேக்கியேல் 43ஆம் அதிகாரம் இதைப்பற்றிப் பேசுகிறது. பலிபீடத்தின் அளவுகள், பலிபீடத்தின் பணிவிடைகள் ஆகியவைகளைப்பற்றி இந்த அதிகாரம் பேசுகிறது. எசேக்கியேல் கண்ட தேவாலயத்தில் பலிபீடம் நடுமையத்தில் இருக்கிறது என்று எந்த வசனங்களின் அடிப்படையில் நீங்கள் சொல்கிறீர்கள்? I just proclaim the truth. Altar is at the centre of the temple. Cross is at the centre of the church.

## சபை உருவாக வழி சிலுவை

"எப்படி சபையை உண்டாக்கலாம்? எது சபை? தேவனுடைய மக்கள் 'இது சபை, அது சபை என்கிறார்களே, எது சபை? குழப்பமாக இருக்கிறதே. எது சபை என்று இனங்காண்பது எப்படி? ஒரு சமுதாய மக்கள் சபையா இல்லையா என்று அடையாளம் காண்பது எப்படி? நாங்கள் சபையாக வாழ விரும்புகிறோம், வழி என்ன?" என்று விசாரித்துக் கேட்பவர்களுக்கு இது பதிலளிக்கிறது. ஆலயத்திலே குழப்பம் ஒன்றும் இல்லை. எல்லாம் அளவுகோலின்படி இருந்தது. உங்கள் தனி வாழ்க்கையிலும் கூட்டு வாழ்க்கையிலும் மையத்தில் சிலுவை இருந்தால் நீங்கள் சபை. உங்கள் உறவுகளிலும் உறவாடல்களிலும் மையத்திலும் சிலுவை இருந்தால் நீங்கள் சபையாகக் கட்டப்படலாம். In your relationship and fellowship if cross is right at the centre that will be the church. **எங்கு சிலுவைக்கு அதற்குரிய நடு இடம் கொடுக்கப்படுகிறதோ, சிலுவையை அதன் எல்லாப் பரிமாணங்களிலும் வேலை செய்ய விடுகிறோமோ, எங்கு சிலுவையை அதன் முழு அளவிலும் வேலை செய்ய விடுகிறோமோ அங்கு சபை உருவாகும். அங்கு சபையின் ஒழுங்கு உருவாகும். அங்கு சபையினுடைய ஊழியங்கள், பணிவிடைகள் உருவாகும். அங்கு சபையிலே ஊழியர்களும் பணியாட்களும் உருவாவார்கள்.** பணியாட்களை யாரும் நியமிக்க முடியாது. We cannot appoint mothers. We have to become a mother. சிலுவைக்கு அதற்குரிய இடம் கொடுக்கும்போது சபையைப்பற்றிய எல்லாக் காரியங்களும் அதற்குரிய இடத்தில் அமையும். ஆகவே, சபை என்பது உள்ளிருந்து வெளியே கட்டப்படுவது. அது வெளியேயிருந்து உள்நோக்கிக் கட்டப்படுவது இல்லை.

## மக்களுக்கு ஜீவனை வழங்குவதே சபையின் நோக்கம்

சபை என்பது தேவனுடைய ஜீவனை மக்களுக்கு வழங்குவதாக இருக்கிறது. The church ministers life to people. எசேக்கியேல் 47இல் இதைப் பார்க்கிறோம். A river flows from the temple to the ends of the

land. Church is justified by its ministering of life to all around. Wherever the river goes, the creatures live. Even the creatures at the Dead Sea will come to life, from one end of the Dead Sea to the other end of the Dead Sea all will come to life. சபை எதற்காக இந்த உலகத்தில் உள்ளது? மனிதர்களுக்கு தேவனுடைய ஜீவனை வழங்குவதற்காக சபை உள்ளது. மனிதர்களுக்குக் கிறிஸ்துவைக் காண்பிப்பதற்காகவும், வழங்குவதற்காகவும், ஊட்டுவதற்காகவும் சபை உள்ளது. சபை சாவின் சூழ்நிலையை ஜீவனின் சூழ்நிலையாக மாற்றுகிறது. Life is the test of the church.

இந்த ஜீவ நதி ஆலயத்தின் பலிபீடத்தின் கீழிருந்து பாய்ந்தோடுகிறது. Life comes out of the cross of Jesus Christ. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சிலுவையில் குத்தப்பட்டபோது அவர் விலாவிலிருந்து இரத்தமும், தண்ணீரும் பாய்ந்து வந்தன. "*கோதுமை மணி நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித் திருக்கும். செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும்*" (யோவான் 12:24) என்று சொன்னார். ஆகவே நாம் பிறருக்கு ஜீவனை வழங்க விரும்பினால் நம் வாழ்க்கையில் சிலுவை நடுவில் இருக்க வேண்டும்.

### சிலுவையின் இரண்டு அம்சங்கள்

சிலுவைக்கு இரண்டு அம்சங்கள் உள்ளன. ஒன்று, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சிலுவையிலே ஒரு பணியை நமக்காகச் செய்து முடித்தார். அதில் நமக்குப் பங்கு இல்லை. ஆனால், இன்னொரு அம்சம் இருக்கிறது. சிலுவை, அனுபவத்தில் நம்மில் கிரியைசெய்ய வேண்டும். Progressively the cross must do its work in us. In the progressive outworking of the cross, we have daily participation. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டதில் அறையப்பட்ட அனுபவம் நமக்கு வேண்டும். நாமும் சிலுவையில் அறையப்படுகிறவர்களாக இருக்க வேண்டும். சிலுவையில் அறையப்படுவது மகிழ்ச்சி யான அனுபவம் அல்ல, சந்தோஷமான அனுபவம் அல்ல. It is a bitter sweet experience. வாயில் இருக்கும்போது கசப்பாக இருக்கிறது. வயிற்றுக்குள் போகிறபோது இனிப்பாக இருக்கிறது.

தேவனுடைய மக்கள் சிலுவையிலறையப்பட்ட வாழ்க்கை வாழ வேண்டும். அப்படிப்பட்ட வாழ்க்கையி லிருந்துதான் தேவனுடைய ஜீவன் பரிமாறப்படுகிறது. **எங்கு தேவனுடைய மக்கள் சிலுவையிலறையப் பட்ட வாழ்க்கை வாழ்கிறார்களோ, அங்கு சபை உண்டு. மக்கள் சிலுவையிலறையப்பட்ட வாழ்க்கை வாழவில்லையென்றால் அங்கு சபை இல்லை**. நீங்கள் இவைகளையெல்லாம் உங்கள் மனதில் கருத்தாய்ப் பதித்துக்கொள்ள வேண்டும்.

"சிலுவை சபையின் எல்லாவற்றையும் ஆளுகைச் செய்கிறது". தேவ மக்களின் வாழ்க்கையில் மையம் முதல் எல்லைவரை எல்லாவற்றையும் சிலுவை ஆளுகைசெய்ய வேண்டும். சிலுவையின் வீச்சிற்கு உட்படாத ஒன்றும் சபையிலே இருக்க முடியாது.

கிறிஸ்துவின் சிலுவை தேவனுடைய மக்களோடு எந்தெந்தப் பரிமாணங்களில் இடைப்படுகிறது என்று பத்து காரியங்களை நான் உங்களோடு பகிர்ந்துகொள்ளப்போகிறேன

### பத்து குறிப்புகளும், பத்து நிருபங்களும்

ஒன்று, ரோமரில் சிலுவை **பழைய மனிதனோடு** இடைப்படுகிறது. இரண்டு, 1 கொரிந்தியரில், சிலுவை **இயற்கையான மனிதனோடு அல்லது மாம்சமான மனிதனோடு அல்லது ஜென்மசுபாவமான மனித னோடு** இடைப்படுகிறது. மூன்று, 2 கொரிந்தியரில், சிலுவை **உடைக்கப்படாத மனிதனோடு** இடைப்படு கிறது. நான்கு, கலாத்தியரில், சிலுவை **சட்டவாதியோடு, சட்டவாத மனிதனோடு,** இடைப்படுகிறது. ஐந்து, எபேசியரில், சிலுவை **பூமிக்குரிய மனிதனோடு** இடைப்படுகிறது. ஆறு, பிலிப்பியரிலே, சிலுவை **இசைவில்லாத, இணக்கமில்லாத மனிதனோடு** இடைப்படுகிறது. ஏழு, கொலோசெயரில், சிலுவை **தத்துவ, புதிரான, அமைப்புமுறையோடு** இடைப்படுகிறது. எட்டு, 2 தெசலோனிக்கேயர் கடிதங்களிலும், சிலுவை **பாடுபடுகிற மனிதனோடு** இடைப்படுகிறது. ஒன்பது, 1 தீமோத்தேயு, 2 தீமோத்தேயு, தீத்து ஆகிய மூன்று கடிதங்களிலும், சிலுவை **அதிகாரம், கீழ்ப்படிதல்** ஆகியவைகளோடு இடைப்படுகிறது. பத்து, எபிரெயரிலே, சிலுவை **நிழல்களான நன்மைகளோடு** இடைப்படுகிறது.

இந்த பத்துக் குறிப்புகளைவைத்து நீங்கள் இந்த நிருபங்களை வாசித்தால் பெறவேண்டிய செய்தி யைப் பெறலாம். Even if you don't listen to the message, you will understand. But if you listen, it will be helpful. Halleluah. Praise the lord. எங்கேயோ உள்ள கிறிஸ்தவர்களைப்பற்றி நான் பேசவில்லை. I am speaking about brothers and sisters who are here. I have taken the comfort out of you. If we think that we are better people than those catholic, Protestants, Pentecostal, brethren and they are not as best we are, that

is wrong. That puffs us up. அது நம்மை கொஞ்சம் ஊத வைக்கிறது. I am speaking to you. I am speaking to you who are right here and to me.

### *1) ரோமர் - சிலுவை பழைய மனிதனோடு இடைப்படுகிறது*

ஒன்றாவது, ரோமரில், **சிலுவை பழைய மனிதனோடு இடைப்படுகிறது**. I believe in the spoken ministry of the word. I believe in taking notes. May be because I am a teacher. I believe in personal study and review of the word. Only when you go through the process, the word will reach you. The whole process is a cross. We speak, you take notes. Then you study. Only then the message is complete. We write a letter and send it to you. You are very tired. So you receive the letter and put it in the pocket and you say that you received the letter. What kind of acception is that? You open the letter. You read it. You study it. Then you speak.

"மனுபுத்திரனே இந்தப் புத்தகத்தை நீ சாப்பிடு. செரிக்கட்டும். பிறகு நீ போய்ப் பேசு," என்று எசேக்கியேலிடம் கர்த்தர் சொல்கிறார். பழைய மனிதன் சிலுவையில் அறையப்படுவதற்கு மட்டுமே தகுதியானவன். There is nothing in the old man for improvement. பழைய மனிதனுக்கு சபை வாழ்க்கையில், சபையில், இடமில்லை. ஆதாம் என்கிற பழைய மனித இனத்தை தேவன் சிலுவையிலே அறைந்தார், சிலுவையிலே நியாயந்தீர்த்தார். நியாயத்தீர்ப்பின் விளைவு என்ன? பழைய மனிதனை முடிவுகட்ட வேண்டும். இவனைக் கொன்று அடக்கம்பண்ணிவிட வேண்டும். அவனுடைய இடத்திலே ஒரு புதிய மனிதன் வர வேண்டும். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நமக்காகப் பாவமானார். ஆனால் அவர் பாவம் அறியாதவர். நம்முடைய பாவங்களை ஏற்றுக்கொண்டார். ஆகவே, "*என் தேவனே, என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்!*" என்று அவர் பழைய மனிதனின் இடத்திலிருந்து தேவனை நோக்கிக் கதறினார். ஆனால், அவரிடத்தில் பாவம் இல்லாததால் மரணம் அவரைக் கவ்விப்பிடிக்க முடியவில்லை. அல்லேலூயா! அவர் உயிர்த்தெழுதலில் வெளிவந்தார்.

பழைய மனிதன் சுயத்தை மையமாக உடைய மனிதன். அவர் நமக்காகப் பாவமாக்கப்பட்டபோது நம்முடைய இடத்தில் "*என் தேவனே, என் தேவனே,*" என்று கதறினார். பழைய மனிதன், சுயமனிதன். சுயமையமனிதன். self-centered man. சுயமையம், சுயமுக்கியத்துவம். சுயபெருமை. சுயநலம், சுயபாதுகாப்பு, சுயவழி என்று பழைய மனிதன் சுயத்தை மையமாகக்கொண்ட மனிதன். சுயமையம், சுயமுக்கியத்துவம், சுயபெருமை, சுயநலம், சுயபாதுகாப்பு, சுயவழி. இவன்தான் சுயத்தை மையமாகக் கொண்ட மனிதன். இவன்தான் பழைய மனிதன். பழைய மனிதனிடத்தில் ஒவ்வொருவரும் மையம். ஒவ்வொருவரும் தனக்கு மையம். பழைய மனிதனை சிலுவை முடிவுக்குக்கொண்டுவந்தது. அவனுடைய இடத்திலே கிறிஸ்து மையமாக மாறுகிறார்.

உங்கள் சிந்தனைக்கு ஆதியாகமம் 22ஆம் அதிகாரத்தைத் தருகிறேன். தேவன் ஆபிரகாமை நோக்கி, "உன் மகனை, உன் ஒரே மகனை, உன் அன்பின் மகனை நான் காண்பிக்கிற இந்த மோரியா மலையிலே பலியாகக் கொடு," என்று சொல்லுகிறார். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இந்தப் பூமியிலுள்ள எல்லா மனிதர்களிலும், எல்லாவற்றிலும், நமக்கு அருமையானவராக, மேன்மையானவராக இருக்க விரும்புகிறார். அவரைவிட இன்னொன்றை, இன்னொருவரை மேலாகக் கருத, அருமையானதாய்க் கருத, அவர் அனுமதிப்பதில்லை. இது உண்மையிலே நம்முடைய இருதயத்தைக் குத்திக் கிழிக்கக்கூடியது. தேவனே கொடுப்பார். பிறகு தேவன் கேட்பார். தேவன் ஈசாக்கைக் கொடுப்பார். நாம் நம் இருதயத்தை ஈசாக்கின்மேல் வைப்போம். அப்போது, "நான் கொடுத்த ஈசாக்கை எனக்குத் தா," என்று தேவன் திரும்பக் கேட்பார். நம் இருதயம் யார்மேல் இருக்கிறது என்பதைக் கண்டறிவதற்கு இது ஒரு பரீட்சை. "ஆபிரகாமே, நீயா அல்லது கர்த்தராகிய நானா அல்லது உன் மகனா?"

### *2) 1 கொரிந்தியர் - சிலுவை இயற்கையான மனிதனோடு இடைப்படுகிறது.*

இரண்டாவது, *1* கொரிந்தியரிலே, சிலுவை இயற்கையான மனிதனோடு இடைப்படுகிறது. இயற்கையான அறிவு, இயற்கையான திறமை, இயற்கையான ஆற்றல், இயற்கையான வளங்கள், இயற்கையான நட்பு, இயற்கையான உறவுகள் எல்லாவற்றோடும் சிலுவை இடைப்படுகிறது. ஒரு நல்ல எடுத்துக்காட்டை 2 சாமுவேல் 24ஆம் அதிகாரத்திலே நாம் பார்க்கிறோம். தாவீது இஸ்ரயேலரை இலக்கம் பார்க்க விரும்பினான். தன் படைத்தளபதி யோவாப்பிடம் அந்த வேலையைச் செய்யச் சொல்லுகிறான்.

சில சமயங்களில் மாம்சமான மனிதர்கள் இயற்கையான மனிதர்களைவிட நல்லவர்களாகத் தென்படுவார்கள். தாவீது இயற்கையான மனிதனைப்போலச் செயல்படுகிறான். யோவாப் மாம்சமான மனிதன். ஆனால் இந்த இடத்திலே யோவாப் தாவீதைவிட நல்லவனாகத் தென்படுகிறான், காட்சியளிக்கிறான்.

“நீர் இலக்கம் பார்க்க வேண்டாம்,” என்று யோவாப் சொல்லுகிறான். ஆனால், அவனுடைய வார்த்தை எடுபடவில்லை. தாவீதின் வார்த்தை பலத்தது. தேவன் இயற்கையான மனிதனோடு இடைப்படுகிறார்.

நீங்கள் இந்த நிகழ்ச்சியைச் சிந்தித்துப்பார்க்க வேண்டும். தாவீது செய்தது தவறா? யுத்தவீரர்கள் எத்தனைபேர் தன் இராஜ்ஜியத்தில் இருக்கிறார்கள் என்று ஓர் அரசன் கணக்கு வைத்துக்கொள்ளவில்லையென்றால் அது முட்டாள்தனம். தாவீது அதைத்தான் செய்தான். ஆனால், தேவன் இயற்கையான மனிதனை அங்கீகரிப்பதில்லை. தேவன் அவனோடு இடைப்படுகிறார்.

அர்வனானின் களத்திலே தாவீது பலியிடுகிறான். அவன் பலியிடுவதற்குத் தேவையான எல்லாவற்றை அர்வனா இலவசமாகக் கொடுக்க முன்வருகிறான். அப்போது தாவீது அர்வனாவிடம், “*அப்படியல்ல. நான் இலவசமாய் வாங்கி, என் தேவனாகிய கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்தாமல், அதை உன் கையிலே விலைக்கிரயமாய் வாங்குவேன்,*” (2 சாமு. 24:24) என்று சொன்னான். இயற்கையான மனிதன் சிலுவையினால் கையாளப்படுவதற்கு விலைக்கிரயம் கொடுக்க வேண்டும்.

இதுதான் சபை வாழ்க்கையின் அழகு. நீ பாவம் செய்யாதபடிக்கு உன்னைத் தடுத்து நிறுத்தக்கூடிய சகோதர சகோதரிகள் உன்னோடு இருந்தால் நீ பாதுகாப்பாக இருக்கிறாய்.

“*பின்பு சாலொமோன் எருசலேமிலே தன் தகப்பனாகிய தாவீதுக்குக் காண்பிக்கப்பட்ட மோரியா என்னும் மலையிலே எபூசியனாகிய ஓர்னானின் களம் என்னும் தாவீது குறித்துவைத்த ஸ்தலத்திலே கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டத்தொடங்கினான்*” (2 நாளா. 3:1) என்று சாலொமோன் தேவாயலத்தைக் கட்டிக்கொண்டிருக்கும் இடம் அங்கு குறிப்பிடப்படுகின்றது. அவனுடைய தகப்பனாகிய தாவீது எந்த ஓர்னானின் (அர்வனா) களத்திலே பலியிட்டானோ அந்த இடத்திலே சாலொமோன் தேவாலயத்தைக் கட்டத்தொடங்கினான். இதன் பொருள் என்ன? எங்கு பழைய மனிதன் கையாளப்பட்டிருக்கிறானோ, எங்கு இயற்கையான மனிதன், மாம்சமான மனிதன், கையாளப்பட்டிருக்கிறானோ அங்குதான் சபைக்கு வேண்டிய தளம் இருக்கிறது. அந்தத் தளத்தில்தான் சபை வாழ்க்கை, சமுதாய வாழ்க்கை, கட்டப்பட முடியும். சபையின் தளம் என்னவென்ற கேள்விக்குப் பதில் சொல்லிவிட்டேன்.

### 3) 2 கொரிந்தியர் - சிலுவை உடைக்கப்படாத மனிதனோடு இடைப்படுகிறது

மூன்றாவது, 2 கொரிந்தியரில், சிலுவை உடைக்கப்படாத மனிதனோடு இடைப்படுகிறது. சபை எதற்காக இருக்கிறது? செத்த மக்களுக்கு ஜீவன் அளிப்பதற்காக இருக்கிறது. இப்போது ஒரு துர்பாக்கிய நிலை என்னவென்றால் உயிரோடிருக்கிறவர்கள்கூட இன்றைக்குச் சபைக்கு வந்தால் செத்துப்போகிறார்கள். செத்துப்போன எலிசாவின் கல்லறையிலே ஒருவன் விழுந்தான். அவன் உயிர்பெற்றான்.

சகோதர, சகோதரிகளே ஒரு கேள்வியை நீங்கள் எழுப்ப வேண்டும். “என்னை, நம்மை, தொடர்பு கொள்கிறவர்கள் உயிர்பெறுகிறார்களா, மரிக்கிறார்களா?” யார் பிறருக்கு உயிரூட்ட முடியும் அல்லது ஜீவனைப் பரிமாற முடியும்?

2 கொரிந்தியர் 4ஆம் அதிகாரத்தை வாசியுங்கள். “*கர்த்தராகிய இயேசுவினுடைய ஜீவனும் எங்கள் சரீரத்திலே விளங்கும்படி இயேசுவின் மரணத்தை எப்பொழுதும் எங்கள் சரீரத்தில் சுமந்து திரிகிறோம். எப்படியெனில், சாவுக்கினமான எங்கள் மாம்சத்திலே இயேசுவினுடைய ஜீவனும் விளங்கும்படி உயிரோடிருக்கிற நாங்கள் எப்பொழுதும் இயேசுவினிமித்தம் மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்படுகிறோம். இப்படி மரணமானது எங்களிடத்திலும், ஜீவனானது உங்களிடத்திலும் பெலன் செய்கிறது*” (2 கொரி. 4:10-12). எப்போதாவதா அல்லது எப்பொழுதுமா? “சிலுவையையும், இயேசுவின் மரணத்தையும் நாங்கள் எப்பொழுதும் சுமந்துதிரிகிறோம், எப்பக்கத்திலும் நெருக்கப்படுகிறோம்; ஆனால் ஒடுங்கிப் போகிறதில்லை. துன்பப்படுத்தப்படுகிறோம், கைவிடப்படுகிறோம்; ஆனால் விழுந்துபோகவில்லை”.

ஊழியம் என்றால் என்ன? பணிவிடை என்றால் என்ன? எவர்கள் உடைக்கப்பட்டிருக்கிறார்களோ, எவர்களுடைய உள்ளமைப்பு தொடப்பட்டிருக்கிறதோ, அவர்கள் மற்றவர்களுக்கு ஜீவனைப் பரிமாறுவார்கள். ஒருவனுடைய உள்ளமைப்பை, கட்டமைப்பை, தொடுவது மிகக் கடினம். My wife cannot touch my constitution. She would have touched a few times and burnt her fingers. Then she would have decided, “Leave this man alone. May the hand of the Lord be upon him”. You wives, don’t give up hope. Brothers and sisters, you don’t get a finished product. You get only a raw material.

பவுலைப்போன்ற உரம்வாய்ந்த மனிதன்கூட கண்ணீர் சிந்துகிற அளவுக்கு உடைக்கப்படுவது என்பது கஷ்டமான காரியம். தேவன் ஏன் சிலுவையின்மூலம் ஒரு மனிதனை உடைக்கிறார்? அந்த மனிதன் மூலமாக ஊழியம் செய்யப்பட வேண்டும் என்பதற்காகவே அவர் அப்படிச் செய்கிறார்.

யாப்போக்கு ஆற்றங்கரையிலே தேவன் யாக்கோபின் தொடைச்சந்தைத் தொட்டார். அதற்குப்பிறகு அவன் தன் வாழ்நாளெல்லாம் நொண்டிநொண்டி நடந்தான். இது உடைக்கப்படுவதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு. உடைக்கப்பட்ட மனிதனிடத்திலே ஒரு நறுமணம் வீசும். அவர்களுடைய பேச்சு அல்ல, அவர்களுடைய செயல்கள் அல்ல, அவர்களுடைய நடவடிக்கைகள் அல்ல, அவர்களே நறுமணமாக இருப்பார்கள்.

### 4) கலாத்தியர் - சிலுவை சட்டவாத மனிதனோடு இடைப்படுகிறது

நான்காவது, கலாத்தியரிலே, சிலுவை சட்டவாத மனிதனோடு இடைப்படுகிறது. கலாத்தியரிலே சிலுவையைப்பற்றிப் பலமுறை வாசிக்கிறோம். கலாத்தியர் 2:20, 5:24, 6:14 ஆகிய வசனங்களிலே சிலுவையைப்பற்றி எழுதியிருக்கிறது. "*நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவை யைக்குறித்தேயல்லாமல் வேறொன்றையுங்குறித்து மேன்மைபாராட்டாதிருப்பேனாக. அவரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது. நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன்,*" (கலா. 6:14) என்று பவுல் சொல்லுகிறார். அவர் இந்த வசனத்தில் சொல்லுகிற உலகம் நாம் காண்கிற சாதாரண உலகம் அல்ல. அவர் இங்கு மத உலகத்தைப்பற்றிப் பேசுகிறார். நாம் எல்லாரும் ஒரு மத உலகத்திலிருந்து வந்தவர்கள்.

நம் தகப்பன் நதிக்கு அப்புறத்திலே அந்நிய தேவர்களைச் சேவித்தவன். அந்தப் பழக்கம் நம்மை விட்டுப் போவதில்லை. புதிய மத உலகத்தை உண்டாக்குவது நமக்குக் கைவந்த கலை. சடங்குகள், ஆசாரங்கள், பாரம்பரியங்கள், வழிபாடுகள் போன்றவைகளெல்லாம் நம்முடைய வாழ்க்கையிலே சட்ட மாக மாறுகின்றன. "*கிறிஸ்து இயேசுவுக்குள் விருத்தசேதனமும் ஒன்றுமில்லை. விருத்தசேதமில்லா மையும் ஒன்றுமில்லை. புது சிருஷ்டியே காரியம்,*" (கலா. 6:15) என்று பவுல் சொல்லுகிறார். தேவன் ஒழுங்குக்கு எதிரானவர் அல்ல. ஆனால், அவர் சட்டவாதத்துக்கு எதிரானவர். It is a very fine point. இது கரணம் தப்பினால் மரணம்போன்ற ஒரு குறிப்பு. "*Husbands, love your wives. Wives, submit to your husbands*." என்பது very good order. Excellent order. God has given an excellent order. But, in the hand of a legalistic man, it will be changed into a fatal, lethal law. ஒரு சட்டவாத மனிதனுடைய கைகளிலே இந்த அருமையான கட்டளை ஒரு கொலைசெய்கிற கட்டளையாக, சட்டமாக, மாறிவிட முடியும். ஜீவனைக் கொடுக்கிற ஒழுங்கை கொலைசெய்கிற சட்டமாக மாற்ற முடியும். குடும்பத்திலும், சபையிலும். அதன்பின் அங்கு குடும்பமும் இருக்காது, சபையும் இருக்காது.

### 5) எபேசியர் - சிலுவை பூமிக்குரிய மனிதனோடு இடைப்படுகிறது

ஐந்தாவது, எபேசியரிலே, சிலுவை பூமிக்குரிய மனிதனோடு அல்லது பூமிக்குரிய தன்மையோடு இடைப்படுகிறது. எபேசியர் ஒரு பரம தன்மையுடைய ஒரு கடிதம் என்று நமக்குத் தெரியும். சபை பூமிக்குரியது அல்ல, அது பரத்திற்குரியது என்று எபேசியர் கூறுகிறது.

தேவனுடைய வார்த்தையை மிகவும் ஆர்வத்தோடும், சிரத்தையோடும் படிக்கின்ற ஒரு நல்ல மூத்த சகோதரரை எனக்குத் தெரியும். ஒருநாள் அவர் என்னிடம், "சபை பரத்துக்குரியது என்று நீங்கள் சொல்லுகிறீர்களே! அந்தச் சபையை எனக்குக் காட்டுங்கள்," என்று கேட்டார். அவரைப் பொறுத்தவரை சபை என்றால் ஞாயிற்றுக்கிழமைகளிலே ஒருவிதமான கூடுகை இருக்க வேண்டும். அவரை நான் மலையுச்சிக்குக் கூட்டிக்கொண்டுபோய், என்னால் சபையைக் காண்பிக்க முடியாது.

நான் ஞாயிற்றுக்கிழமை கூடுகையை அனுசரிப்பவன். ஞாயிற்றுக்கிழமை கூடுகையில் பயனுண்டு என்று நம்புகிறவன். ஆனால், ஞாயிற்றுக்கிழமை கூடிவரவில்லை என்றால் மரண தண்டனை என்று புதிய ஏற்பாட்டில் எழுதியிருப்பதாக நான் நம்பவில்லை. நான் சொல்லுகிற இந்தக் காரியம் பலருக்கு இடறலாக இருக்கலாம்.

"சபையைக் கண்டிப்பாகக் கண்களால் பார்க்க வேண்டும். கூடுகைகள் வேண்டும். எண்ணிக்கையைப் பார்க்க வேண்டும். மக்கள் கூட்டத்தைப் பார்க்க வேண்டும். அங்கு நிகழ்ச்சிநிரலும், அட்டவணையும் வேண்டும். அடுத்த பத்து ஆண்டுகளுக்கான செயல்திட்டம் இருக்க வேண்டும்," என்று என்னிடம் கேள்வி கேட்ட சகோதரனைப்போல் பலர் எதிர்பார்க்கிறார்கள். திட்டமிட வேண்டும் என்பதை நான் நம்புகிறேன். ஆனால், சபை பூமிக்குரியது அல்ல; அது பரத்திற்குரியது. அதன் தன்மை பூமிக்குரியது அல்ல; அது பரத்திற்குரியது. அந்தப் பரத்திற்குரிய தன்மைக்கு ஊறு விளைவிப்பதுபோல நாம் எதையும் செய்ய முடியாது, செய்யக்கூடாது. தேவனுடைய மக்கள் எல்லாரும் இதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எப்படி தேவனுடைய வீட்டிலே வாழ்வது? நீங்கள் பரம வழியில் நடக்க வேண்டும்.

ஒரு நல்ல எடுத்துக்காட்டு பழைய ஏற்பாட்டிலே உண்டு. அபினதாபின் குமாரனாகிய ஊசா சாட்சிப் பெட்டியை மாட்டு வண்டியிலே வைத்து தேவனுடைய கூடாரத்துக்குக் கொண்டுபோகிறான். நல்ல நோக்கத்தோடுதான் அவன் இதைச் செய்தான். அது நல்ல நோக்கம் மட்டுமல்ல. அது அந்த யுகத்தின் தரிசனம். அது மிகவும் வலி நிறைந்தது. சாட்சிப்பெட்டியை ஒரு தனி மனிதனுடைய கூடாரத்திலிருந்து கொண்டுபோவது நல்லது. இது தரிசனம். வழியிலே மாடு மிரண்டது. இது தேவனுடைய இறையாண் மைக்கு அப்பாற்பட்டதல்ல. இது தேவனுடைய இறையாண்மைக்கு உட்பட்டது. சாட்சிப்பெட்டி கீழே விழப்போகையில் ஊசா அது கீழே விழாதபடிக்குத் தன் கையை நீட்டி அதைத் தாங்கிப்பிடித்தான்.

இது சாதாணரமான எந்த மனிதனும் செய்யக்கூடிய செயல்தானே! இது புத்திசாலித்தனமான செயல் தானே! உங்கள் பெட்டி கார்மேலிருந்து கீழே விழுந்தால், "இது கர்த்தருடைய சித்தமில்லை, கீழே விழட்டும்," என்று விட்டுவிடுவீர்களா? விடமாட்டோம். "இது அதிகப்பிரசங்கித்தனம் அல்லது ultra spiritual," என்று சொல்வோமா? கீழே விழும்போது அதைத் தாங்கிப்பிடிக்கவில்லையென்றால்தான் அதை முட்டாள்தனம் என்று நாம் சொல்வோம். எனவே, என்ன செய்ய வேண்டுமோ, அதைத்தான் ஊசா செய்தான்.

ஆனால், கர்த்தர் அவனை அடித்தார். அவன் அந்த இடத்திலே செத்தான். தாவீது மனமடிவடைந்து, தேவன்மேல் கோபப்படுகிறான். தேவன் கோபம் கொள்ளலாமா? கொள்ளக்கூடாது. கோபம் கொள்ளக் கூடாது. ஆனால் கோபம் வருகிறது. அப்போது நாம் தேவனிடத்தில் ஏமாற்றமடைகிறோம். தேவன் நம் பூமிக்குரிய தொடுகைகளை அங்கீகரிக்க வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கிறோம். நாம் தேவனுக்காக ஒரு காரியத்தைச் செய்தபின், "தேவனே, இது உமக்காக, உம்முடைய நோக்கத்துக்காக," என்று சொன்னாலும்கூட, அதில் பூமிக்குரிய தொடுகை இருந்தால், தேவன் அதை அங்கீகரிக்க வேண்டும் என்றோ அல்லது ஆசீர்வதிக்க வேண்டும் என்றோ அவசியம் இல்லை. தேவனுடைய பரம காரியங் களைப் பூமிக்குரிய தொடுகையோடு நிறைவேற்ற முடியாது. தேவன் ஊசாவை அடித்ததுபோல, நம்முடைய வாழ்க்கையில் ஏதாவது நடந்துவிட்டால், நாம் உடனே, "நான் இனிமேல் ஒன்றும் செய்யப் போவதில்லை," என்று தீர்மானித்துவிடுகிறோம். தவறு. "நீர் சொன்னால் நான் தொடுகிறேன். இல்லை யென்றால் நான் அமைதியாக இருக்கிறேன்," என்பதுதான் நம் மனப்பாங்காக இருக்க வேண்டும். தேவனுடைய தொடுகையா அல்லது தேவன்மேல் பயமா-இந்த இரண்டில் எது வேண்டும் என்று கேட்டால், தேவன்மேல் நமக்குப் பயம் வேண்டும் என்றே நான் சொல்வேன்.

மிக முக்கியமாக நம்முடைய உறவாடல்களிலே இப்படிப்பட்ட பூமிக்குரிய தொடுதல் இருக்கிறது. நம் முடைய ஒவ்வாமைகள், வேறுபாடுகள், மாறுபாடுகள் இவைகளையெல்லாம் நாம் பூமிக்குரிய விதத் திலே கையாளுகிறோம்.

### 6) பிலிப்பியர் - சிலுவை இசைவற்ற மனிதர்களோடு இடைப்படுகிறது

ஆறாவது, பிலிப்பியரிலே சிலுவை இசைவற்ற மனிதர்களோடு இடைப்படுகிறது. நாம் ஒரே தந்தையின் பிள்ளைகள்தான். ஒரே ஆவி, ஒரே கிறிஸ்து. ஆனால் தேவனுடைய மக்களிடையே இசைவில்லாமல் போகிறது. இசைவிற்குப்பதிலாக இரைச்சல் இருக்கிறது. உறவுக்குப்பதிலாக உரசல் இருக்கிறது. இணக்கத்திற்கு மாறாக பிணக்கு இருக்கிறது. இதற்கு என்ன தீர்வு? தேவன் சிலுவையைக்கொண்டு இப்படிப்பட்ட பிணக்குகளோடும், உரசல்களோடும், உராய்வுகளோடும் இடைப்படுகிறார். தேவன் எந்த சகோதர சகோதரிகளோடு என்னை இணைத்திருக்கிறாரோ, என்னுடைய மரணம்வரை அவர்களோடு வாழ்வதற்கு நான் தயாரில்லை. ஆனால் தயார்படுத்திக்கொள்கிறேன். பல்லைக் கடித்துக்கொண்டு அல்ல. "கர்த்தாவே, எப்படியாவது சமாளித்துக்கொள்வேன். ஆனால், இந்தக் கசப்பான பாத்திரத்தை என்னைவிட்டு அகற்றும். இந்த இடத்திலிருந்து, ஒன்று, இந்தச் சகோதரனை வேறு இடத்துக்குக் கொண்டுபோய்விடும் அல்லது என்னைக் கொண்டுபோய் விடும். ஏதோவொன்றைச் செய்யும்," என்ப தல்ல. எதுவும் மாறாது. ஒன்றேவொன்றுதான் மாற வேண்டும். நான் என்னுடைய சகோதர சகோதரி களோடு, என்னுடைய குடும்பத்தோடு, தேவ மக்களோடு இசைவாவதற்கு சிலுவை என்னோடு இடைப் படுவதற்கு நான் ஒத்துழைக்க வேண்டும்.

பிலிப்பியர் 2ஆம் அதிகாரத்திலே பவுல் ஆண்டவராகிய இயேசுவை உதாரணமாகச் சொல்லுகிறார். அவர் தன்னை முக்கியமானவராய்க் கருதவில்லை; மற்றவர்களை முக்கியமானவர்களாய்க் கருதி, தன்னை அடிமையாய்த் தாழ்த்தினார். பிலிப்பியர் 2ஆம் அதிகாரத்திலே அவரவர் மற்றவர்களைத் தன்னைவிட முக்கியமானவர்களாய்க் கருதுவார்கள் என்று எழுதியிருக்கிறது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இப்படிப்பட்ட இசைவிற்காக மனிதர்களோடு தன்னைப் பலியாக்கினார். தேவனுக்கு மனித னோடு எந்தப் பகையும் இல்லை. மனிதனுக்குத்தான் தேவனோடு பகை இருக்கிறது. எனவே, மனிதன்

தான் தேவனோடு ஒப்புரவாக வேண்டும். ஆனால், தேவன் மனிதனோடு ஒப்புரவாவதற்காகத் தம்மைப் பலியாக்கினார்.

ஒரு சகோதரனுக்கும் எனக்கும் ஒரு உராய்வு இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். இந்த உராய் வுக்குக் காரணம் அந்தச் சகோதரன் என்று நான் நினைக்கிறேன். எனவே, இசைவாவதற்கான முன்முயற்சியை அந்தச் சகோதரன்தான் எடுக்க வேண்டும் என்பது என் வாதம். ஆனால், இதற்கு ஒரு மாற்று இருக்கிறது. சிலுவை அதைவிட அதிகமாக, ஒப்புரவாவதற்கு நான் போய் அந்த முன்முயற் சியை எடுக்க வேண்டும் என்று கோருகிறது. "உங்களுடைய பணிவிடையில் என்னை நான் பானபலி யாக ஊற்றுகிறேன்," என்று பவுல் பிலிப்பியரிலே சொல்கிறார்.

**7) கொலோசெயர் - சிலுவை நம் புதிரான, தத்துவ அமைப்புமுறைகளோடு இடைப்படுகிறது**

ஏழாவது குறிப்பு, கொலோசெயரிலே, சிலுவை நம்முடைய புதிரரான, தத்துவ அமைப்புமுறைகளோடு இடைப்படுகிறது. Cross deals with the mystical, philosophical systems. "*லௌகீகமான ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும் ஒருவனும் உங்களைக் கொள்ளைகொண்டு போகாதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள். அது உலக பாரம்பரியங்களையும் மனுஷ தந்திரங்களைப் பற்றினதேய ல்லாமல் கிறிஸ்துவைப் பற்றினதல்ல*" (கொலோ. 2:8). அது கிறிஸ்துவுக்குரியதல்ல அல்லது கிறிஸ்து வுக்கேற்றதல்ல. மிக மதிப்பிற்குரிய ஒரு தத்துவ அமைப்பை நாம் உண்டாக்கலாம். "தொடாதே, ருசிபார்க்காதே, தீண்டாதே," என்பவைகளெல்லாம் பார்வைக்கு மிகவும் பக்திமயமானதாகத் தோன்றும். ஆனால், இவைகள் பயனற்றவை என்று பவுல் கூறுகிறார். அதே கொலோசெயரிலே, "*ஒருவனும் போஜனத்தையும், பானத்தையும் குறித்தாவது, பண்டிகை நாளையும் மாதப்பிறப்பையும், ஓய்வுநாட் களையும் குறித்தாவது உங்களைக் குற்றப்படுத்தாதிருப்பானாக. இவைகளெல்லாம் வருங்காரியங் களுக்கு நிழலாயிருக்கிறது. இவைகளின் பொருள் கிறிஸ்துவைப் பற்றினது*" (கொலோ. .2: 16, 17) என்று பவுல் எழுதுகிறார்.

நம்முடைய உறவாடல்களிலே ஒரேவொரு கேள்விதான் உண்டு. இது கிறிஸ்துவுக்குரியதா? In our dealings and in our fellowship there is one question. Is it according to Christ? கிறிஸ்துவுக்கு ஒத்ததா அல்லது கிறிஸ்துவுக்கு ஏற்றதா அல்லது கிறிஸ்துவுக்கு ஒவ்வாததா? கிறிஸ்துவுக்கு ஏற்புடையதில்லா ததைக்குறித்து நாம் சிந்திக்க வேண்டும். கிறிஸ்துவுக்கு ஒவ்வாதது என்றால் அது நல்லதாய்த் தோன்றினாலும் சிலுவை அதோடு இடைப்படுகிறது.

**8) தெசலோனிக்கேயர் - சிலுவை துன்புறுகிற மனிதனோடு இடைப்படுகிறது**

எட்டாவது, 1, 2 தெசலோனிக்கேயரில் சிலுவையைப்பற்றி வெளிப்படையாக ஒன்றும் சொல்லவில்லை. ஆனால், அவர்கள் பாடுபட்ட விசுவாசிகள், துன்புற்ற விசுவாசிகள், நற்செய்திக்காக, சுவிசேஷத்திற்காக துன்புற்றார்கள். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து விரைவாக வந்து தங்கள் துன்பங்களை நீக்குவார் என்பது அவர்களுடைய எதிர்பார்ப்பு. ஆனால், இதுவரை ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து வரவில்லை. சிலுவை துன்புறுகிற, துன்பத்திலிருந்து எந்த விடுதலையுமில்லாத மனிதனோடு இடைப்படுகிறது. நீங்கள் நன்றாய்க் கவனியுங்கள். எல்லாத் துன்பங்களிருந்தும் தேவனுடைய மக்கள் எல்லாரும் விடுவிக்கப்படுவதில்லை.

சில துன்பங்களிலிருந்து தேவன் தம்முடைய மக்களை விடுவிப்பதில்லை. யாக்கோபை ஏரோதின் வாளுக்கு இறையாக்கினார். பேதுருவை ஏரோதின் சிறையிலிருந்து விடுவித்தார். "ஏன் ஆண்டவரே?" என்று யாக்கோபு கேட்க முடியாது. பேதுரு, "அது யாக்கோபின் அவிசுவாசம்," என்று சொல்ல முடி யாது. சிலுவை இதோடு இடைப்படுகிறது, இடைப்பட வேண்டும். ஒருவர் கொலைசெய்யப்பட்டார்; இன்னொருவர் விடுதலைசெய்யப்பட்டார்.

யோவான் ஸ்நானனுக்கு ஆண்டவராகிய இயேசுவின்மேல் அப்படிப்பட்ட ஒரு வருத்தம் இருந்தது. "உண்மையிலேயே இவர்தான் மேசியா என்றால் சிறைச்சாலையிலேயே என்னைச் சந்திக்க வந்திருப் பாரே! என்னை விடுவித்திருப்பாரே!" என்பது யோவான் ஸ்நானனுடைய எதிர்பார்ப்பு. ஆகையால், அவர் ஆள் அனுப்பி, "வருகிறவர் நீர்தானா? அல்லது இன்னொருவர் வரக் காத்திருக்க வேண்டுமா அல்லது இன்னொருவர் வரவேண்டுமா? வருகிறவர் நீர்தான் என்றால் என்னை இரட்சித்திருப்பீரே," என்று கேட்கிறார். ஆண்டவராகிய இயேசு, "என்னிடத்தில் இடறலடையாதிருக்கிறவன் பாக்கியவான்," என்று பதில் சொன்னார்.

பரிசுத்தவான்களிடம் நாம் offend ஆகிவிடக் கூடாது என்று நான் அடிக்கடி சொல்வேன். நான் பயன் படுத்துகிற வாழ்க்கை "சலிப்பு". "இவர்களெல்லாம் மாறவே மாட்டார்கள். சுட்டுப்போட்டாலும் இவர்கள்

மாறமாட்டார்கள்," என்று சொல்வதற்கு நமக்கு எந்த அதிகாரமும் இல்லை. அவர்கள் விழுந்தாலும் எழுந்தாலும் ஆண்டவருக்கே கணக்கு ஒப்புவிப்பார்கள்.

### *9) 1, 2 தீமோத்தேயு, தீத்து – சிலுவை அதிகாரத்தோடும், கீழ்ப்படிதலோடும் இடைப்படுகிறது*

ஒன்பதாவது, 1, 2 தீமோத்தேயுவிலும், தீத்துவிலும் சிலுவை அதிகாரத்தோடும், கீழ்ப்படிதலோடும் இடைப்படுகிறது. தேவ மக்கள் மத்தியிலே அதிகமாய் துஷ்ப்பிரயோகம் பண்ணப்பட்ட ஒரு கருத்து, *அதிகாரமும், பணிந்தடங்குதலும்*. இந்த மூன்று கடிதங்கள் எழுதப்பட்ட காலத்தில் தேவனுடைய மக்கள் சீரழிந்துவிட்டார்கள், தரந்தாழ்ந்துவிட்டார்கள். சபை ஏற்கெனவே சரியத்தொடங்கிவிட்டது.

தேவனுடைய மக்கள் மட்டுமல்ல. தேவனுடைய மக்களிடையே உள்ள தலைவர்கள், நடத்துகிறவர்களி டையே சீரழிவு ஏற்பட்டிருந்தது. அது தேவ மக்களை நடத்துவது ஆதாயத் தொழிலாய் மாறின காலம். "தேவ பக்தியை ஆதாயமாக எண்ணுகிறதை விட்டு நீ விலகு," என்று (1 தீமோ. 6 ) பவுல் கூறுகிறார். பேதுருவும் அதைப்பற்றி 1 பேதுரு 5ஆம் அதிகாரத்திலே எழுதுகிறார். தேவனைச் சேவிக்கிற, தேவ னுக்குப் பணிவிடை செய்கிற, அவர்களோடு சிலுவை இடைப்படுகிறது. அவர்களுக்கு அதிகாரம் இருக் கிறது. ஆனால், அந்த அதிகாரத்தை அவர்கள் பயன்படுத்த முடியாது. இந்த விந்தையான அதிகாரத்தைச் சிந்தனை செய்து பாருங்கள். பயன்படுத்த முடியாத அதிகமான அதிகாரம். இப்படிப் பட்ட விந்தையான அதிகாரத்தைப் பயன்படுத்த யார் முன்வருவார்கள்?

"*எவன் தன் சொந்தப் பணத்தைச் செலவழித்து தண்டிலே சேவகம் பண்ணுவான்? எவன் திராட்சத் தோட்டத்தை உண்டாக்கி, அதின் கனியைப் புசியாதிருப்பான்? எவன் மந்தையை மேய்த்து அதின் பாலைக் குடிக்காதிருப்பான்?*" (1 கொரி. 9:7) என்று பவுல் அந்தக் கேள்வியைக் கேட்கிறார். எவன் சிலுவையினால் கையாளப்பட்டிருக்கிறானோ அவன்தான் அதைச் செய்ய முடியும். சிலுவையிலறை யுண்ட இப்படிப்பட்ட பணியாட்கள் தேவை.

2 தீமோத்தேயு 2:3–7ஆம் வசனங்களை நாம் வாசிப்போம். "*நீயும் இயேசுகிறிஸ்துவுக்கு நல்ல போர்ச் சேவகனாய்த் தீங்கநுபவி. தண்டில் சேவகம்பண்ணுகிற எவனும் தன்னைச் சேவகமெழுதிக்கொண்ட வனுக்கு ஏற்றவனாயிருக்கும்படி பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக்கொள்ளமாட்டான். மேலும் ஒருவன் மல்யுத்தம்பண்ணினாலும் சட்டத்தின்படி பண்ணாவிட்டால் முடிசூட்டப்படான். பிரயாசப்பட்டுப் பயிரிடுகிறவன் பலனில் முந்திப் பங்கடைய வேண்டும். நான் சொல்லுகிறவைகளைச் சிந்தித்துக்கொள். கர்த்தர் உனக்கு எல்லாக் காரியங்களிலும் புத்தியைத் தந்தருளுவார்*". "*நான் சொல்லுகிறவைகளைச் சிந்தித்துக்கொள். கர்த்தர் எல்லாக் காரியங்களிலும் உனக்குப் புத்தியைத் தந்தருளுவார்*" என்பது எனக்கு மிகவும் பிடித்த ஒரு வசனம். Reflect on what I say. The lord will give you understanding. The lord will give you insight. அதே அதிகாரத்திலே, "*இந்த வார்த்தை உண்மையுள்ளது. என்னவெனில், நாம் அவரோடேகூட மரித்தோமானால், அவரோடேகூடப் பிழைத்துமிருப்போம். அவரோடேகூடப் பாடு களைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம். நாம் அவரை மறுதலித்தால், அவ ரும் நம்மை மறுதலிப்பார்,*" (11, 12) என்று நாம் வாசிக்கிறோம்.

உங்கள் மத்தியிலே தலைவர்கள் யார், உங்களை நடத்துகிறவர்கள் யார், பொறுப்பானவர்கள் யார், மூப்பர்கள் யார் என்பதைக் கண்டுபிடிப்பது எளிதா, கடினமா? மிக எளிது. நான் ஒரு technique சொல்லிக் கொடுக்கிறேன். உங்களிடையே உள்ள யாராவது ஒருவரை நீங்கள் நடத்துகிறவர் என்று ஏற்றுக்கொண்டாக வேண்டும். அதைவிட ஒரு slip இலே நீங்கள் மூன்று பேரை "எங்களை நடத்து கிறவர்கள்" என்று எழுத வேண்டும். உங்கள் சபையிலே எல்லாரும் அப்படி எழுத வேண்டும்.

"யாரும் என்னை நடத்த முடியாது. 1 யோவான் 2::27இன்படி அந்த அபிஷேகம் என்னை நேராய் நடத்துகிறது. ஒருவனும் எனக்குப் போதிக்க வேண்டுவதில்லை," என்று சொல்லி தேவனுடைய பிள்ளைகள் சிதறிப்போவதை நான் பார்க்கிறேன்.

சிலுவையால் கையாளப்பட்ட அதிகாரம் என்று ஒன்று உண்டு. மோசேயினுடைய அதிகாரம் அப்படிப பட்ட அதிகாரம். இஸ்ரயேல் மக்கள் அல்லது உடன்பிறந்தவர்கள் அவனை எதிர்த்தபோது அவன் முகங்குப்புற தேவனுக்குமுன்பாக விழுந்தான். இது உண்மையாகவே சிலுவையிலறையப்பட்ட அதிகாரம். Authority at its most powerful form.

தன் சீடர்களுடைய கால்களைக் கழுவிய மனிதனைவிட அதிகாரமுள்ளவர் வேறொருவரும் இல்லை சிலுவை நம்முடைய அதிகாரத்தோடு இடைப்படுவதற்கு நாம் விட்டுவிடலாம். தேவனுடைய மக்கள் நமக்குக் கீழ்ப்படிய மாட்டார்களே என்று நாம் அஞ்சவேண்டியதில்லை.

காரியத்தின் கடைத்தொகை என்னவென்றால் தேவனுடைய மக்களுக்காய் நாம் நம்மைப் பானபலியாய் ஊற்ற வேண்டும். தேவன் நமக்கு அதிகாரத்தைத் தருகிறார். அவர்கள் மேலும் நமக்கு அதிகாரத்தைத் தருகிறார். ஆனால் அதிகாரத்தை நாம் பயன்படுத்துவதில்லை. மேற்கொண்டு விளக்கத்திற்குப் பிலேமோன் நிருபத்தை வாசியுங்கள். *"நீர் செய்யத்தக்கதை உமக்குக் கட்டளையிடும்படிக்குக் கிறிஸ்துவுக்குள் நான் துணியத்தக்கவனாயிருந்தும், அப்படிச் செய்யாமல், அன்பினிமித்தம் மன்றாடுகிறேன்"* (பிலே. 1:9). Authority in a most beautiful way.

### 10) எபிரெயர் - சிலுவை நிழல்களோடு இடைப்படுகிறது

பத்தாவது, எபிரெயரிலே, சிலுவை நிழல்களோடு அல்லது ஆவிக்குரியதுபோலத் தோன்றுகிற ஆனால் ஆத்துமாவுக்குரிய காரியங்களோடு இடைப்படுகிறது. "ஒரு காரியம் ஆவிக்குரியதா அல்லது ஆத்துமாவுக்குரியதா?" என்று தேவனுடைய மக்கள் எப்போதும் ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்று நான் எதிர்பார்க்கவுமில்லை, சொல்லவுமில்லை. தேவனுடைய மக்கள் இயல்பாக வாழ வேண்டும். ஆனால், நம்முடைய உறவாடல்களிலே நிழல்களைப் பற்றிப்பிடித்துக் கொள்ளக்கூடாது. *"நாம் அசைவில்லாத ராஜ்யத்தை சுதந்தரிக்கப்போகிறவர்கள்"* (எபி. 12:28). நாம் நம்முடைய சமுதாய வாழ்க்கையில் அசைக்கப்படும்போது அல்லது குலுக்கப்படும்போது அவைகளெல்லாம் பொலபொலவென்று விழுந்துவிடும். அசையக்கூடியவைகளை சிலுவை அசைத்துவிடும். சிலுவையினால் அசைக்கப்பட்டபின் எஞ்சியிருப்பவைகள் மட்டுமே தேவனுக்குரியவை.

இந்தச் செய்தி நாம் நம்முடைய சபை வாழ்க்கைக்கும், தனிப்பட்ட வாழ்க்கைக்கும், உறவின் வாழ்க்கைக்கும் பிரயோகிக்கக்கூடிய ஒரு சங்கதி. நீங்கள் இதை எடுத்துக்கொண்டுபோய் ஜெபிக்க வேண்டுமென்று உங்களை அறிவுறுத்துகிறேன். நீங்கள் சபையைக் கட்ட விரும்பினால், "சபை கட்டுவதில் எனக்கு ஒரு பங்கு வேண்டும்," என்று நீங்கள் விரும்பினால், சிலுவை உங்களில் பூரண கிரியை செய்யக்கடவது. அப்படியில்லை. நான் இதை மாற்றிச் சொல்கிறேன்.

சிலுவை நம்முடைய வாழ்க்கையின் நடுமையத்தில் இருக்கக்கடவது. சிலுவை அதின் எல்லாப் பரிமாணங்களிலும் செயல்படக்கடவது. In all dimensions let cross be centre of our personal and corporate life. Especially in our corporate life, in our relationships and our fellowships, in our dealing with one another. Let cross work in our life, in all its dimensions. Let cross do its full work. அப்பொழுது அங்கிருந்து சாவை ஜீவனாய் மாற்றுகின்ற ஒரு நதி புறப்பட்டு வரும். ஆண்டவரே நான் அப்படிப்பட்ட ஒரு நபராக இருக்க விரும்புகிறேன். ஒரு சபை வாழ்க்கையிலே நூறு பேர் இருக்கலாம். ஆனால் இரண்டு வகைகள் இருக்க வேண்டுமென்பது தேவனுடைய நோக்கம் அல்ல. தேவனுடைய மக்கள் எல்லாரும் அவருடைய ஆசாரியர்களாக இருக்க வேண்டுமென்றுதான் அவர் விரும்புகிறார். ஆனால், லேவி கோத்திரம் மட்டும்தான் தேவனோடு ஒத்துழைத்தார்கள். அது தேவனுடைய ஆதி எண்ணம் அல்ல. தேவனுடைய மக்கள் எல்லாரும் தீர்க்கதரிசிகளானால் எவ்வளவு நலமாயிருக்கும்! தேவனுடைய மக்கள் எல்லாரும் சாதோக்கிய ஆசாரியர்களானால் எவ்வளவு நலமாயிருக்கும்.

திரைக்குப்பின் பணிவிடை செய்யவும் நான் விரும்புகிறேன். திரைக்குமுன் பணிவிடை செய்யவும் நான் விரும்புகிறேன். இரண்டிற்கும் ஆயத்தமாக்கப்பட்ட ஒரு பாத்திரமாக இருக்கும்படி நான் வாஞ்சிக்கிறேன். இதை நான் தெரிந்தெடுக்க விரும்பவில்லை. ஆண்டவரே, நீர் தெரிந்தெடும். விறகு வெட்டவும், தண்ணீர் கொண்டுபோகவும் ஒரு பாத்திரம் வேண்டும் என்று அவர் விரும்பும்போது நான் அதற்கு ஆயத்தமானவன் இல்லை என்று அவர் காணக்கூடாது. திரைக்குப்பின் ஒரு நபர் வேண்டும் என்று தேவன் தேடும்போது அதற்கும் நான் ஆயத்தம் இல்லை என்று தேவன் காணக்கூடாது. இப்படிப்பட்ட தேவனுடைய மக்களின் எண்ணிக்கை கூட வேண்டும். இவைகளெல்லாம் நம் அன்றாட வாழ்க்கையில் நம் சிந்தனைகளையும், சொற்களையும், செயல்களையும், நடவடிக்கைகளையும் தொடும்.

அருமையான பரிசுத்தவான்களே! சிலுவை இனிதல்ல. அது கசப்பானது. அந்தக் கசப்பின் முடிவில் இனிமை இருக்கும். சிலுவையின் விளைவு நாம் சுற்றியுள்ள மனிதர்களுக்கும், தேவ மக்களுக்கும் மரணத்தை ஜீவனாய் மாற்றுகின்ற வாய்க்கால்களாய் மாறுவோம். யாரும் உங்களை நிர்ப்பந்திக்கமாட்டார்கள். We need volunteers to be crucified. சிலுவையிலறையப்படுவதற்கு முன்வருபவர்கள் தேவனுக்குத் தேவை. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவே உங்களுக்கு வெகுமதியாய் இருப்பார். The lord himself will be the reward. இஸ்ரயேலிலே லேவியருக்குக் காணியாட்சிக் கொடாதிருப்பாயாக. They need no other reward. The Lord himself will be the reward. Amen.